**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 258/2005**

**PROSECUTION WITNESS NO. 7**

| | | |
|---|---|---|
| **Name** : திரு. தாமோதரன் | |
| **Father's/Husband Name :** கோதண்டராமன் | **Occupation** : காவல் ஆய்வாளர் (ஓய்வு) |
| **Village** : தஞ்சாவூர் | **Age** : **76/2024** |

**(Accused Present.)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு, சு, நித்தியகுணாளன், பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. ர.நித்யா, தட்டச்சர்**

**<u>C.C.No. 258/2005 29.11.2024</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.43**

**முதல் விசாரணை:**

**1,** நான் தஞ்சாவூர் CBCID பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2006 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 2001 முதல் தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். தஞ்சாவூர் காவல் துறை அலுவலக ந.க.எண். 17932/சி2/2002, நாள். 21.05.2002 பெறப்பட்ட புகாரில் சென்னை அரசு தேர்வுகள் இயக்குநரின் செயலாளர் அலுவலக ந.ந.க.எண். 130049/சி2/வி2/2/2001, நாள்.26.04.2002 புகாரில் எதிரி சிவகாமி மீது தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண். 14/2002, ச.பி. 465, 468, 471, 420 இதசவின் படி வழக்கு பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. இவ்வழக்கு தொடர்பாக பார்ட்டி சகிதம் எதிரியை 29.05.2002ம் தேதி மதியம் 14.30 மணிக்கு தஞ்சாவூர் தமதம மேடை மேலவீதி எதிரி வீட்டின் எதிரே கைது செய்து தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவிற்கு கொண்டு வந்து அவரை பெண் காவலர் முன்னிலையில் விசாரணை செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 18.06.2002ம் தேதி அ.சா.1 நடராஜன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.07.2002ம் தேதி அ.சா.4 கலைச்செல்வி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.08.2002ம் தேதி மருத்துவர் எஸ். செல்லாராமன் அவர்களை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே மருத்துவர் சுப்ரமணியன் அவர்களை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. 05.01.2004ம் தேதி. அ.சா.6 காளிதாஸ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.07.2004ம் தேதி அ.சா. 5 திருமதி. துளசிபாய்

அவர்களை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.07.2004 அன்று இந்த வழக்கின் எதிரி ராஜமாணிக்கத்தின் இறப்பு சான்றிதழையும், சென்னை புரசவாக்கம் ஓட்டேரி காவல் நிலைய குற்றஎண். 07/2004 என்ற வழக்கின் முதல் தகவல் அறிக்கையும் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**எதிரி ராஜமாணிக்கத்தின் இறப்பு சான்றிதழ் மற்றும் ஓட்டேரி காவல் நிலையத்தின் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 13 மற்றும் அ.சா. ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

4. 07.08.2004ம் தேதி அன்று வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் சிவகாமி, ராஜமாணிக்கம் ஆகியோர்களுக்கு எதிராக ச.பிரிவுகள் 465, 468, 471, 420 இதசவிற்கு பதிலாக ச.பிரிவுகள் 465, 468, 471, 420 உ/இ 34 இதசவின் படி பிரிவு மாற்றம் செய்து எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. குறியீடு செய்யப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் சென்னை CBCID காவல் நிலையத்தில் வழக்கு கோப்பில் இருந்த ஆவணங்களின் நகல்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி சிவகாமி சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரி சிவகாமி மதிப்பெண் சான்றிதழை சென்னையில் பள்ளி கல்விதுறை தேர்வாணைய ஆவணங்களோடு ஒப்பிட்டு பார்க்கவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து ஆவணங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(ஒப்பம்/–திருமதி.எஸ்.சுசிலா),
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.